
31205

உ
சிவமயம்

# திருஇரும்பூளை
என்னும்
# ஆலங்குடி தல வரலாறு



திருக்கோயில் வெளியீடு
1992

உ

சிவமயம்

# திரு இரும்பூளை

என்னும்

# ஆலங்குடி தல வரலாறு

(தேவாரப் பாடல் பெற்றது)

எழுதியவர் :

தருமையாதீன சமயப் பிரசாரகர்

கருகாவூரான் அடிமை

**கோ. சிவஞானம் என்கிற மருள்நீக்கியார்**

அருள்மிகு ஆபத்சகாய ஸ்வாமி

திருக்கோயில்

(குரு-ஸ்தலம்)

ஆலய வெளியீடு

1992

விலை. ரூ. **3—00**

# முன்னுரை

நம் தமிழ்நாடு தெய்வ மணம் திகழும் திருநாடு முன்னோர்கள் அமைத்த ஆலயங்கள் ஆன்மீக உணர்ச்சியை உண்டாக்கும் ஊற்றுக்கள், நமது தென்னாட்டில் காணும் இடமெல்லாம் கண்கவர் ஆலயங்கள் பல இருக்கின்றன. அவற்றுள்ளே திரு இரும் பூளை என்னும் ஆலங்குடி பல வகைகளிலும் சிறப்புடையது; பாடல் பெற்றது ஆலயத்துக்கு வருபவர்கள் அந்தந்த ஆலயத்தின் அருமை பெருமைகளை அறிந்துகொள்ள வேண்டியது மிகமிக அவசியமானது ஆலங்குடி என வழங்கும் திருஇரும்பூளை தலத்தின் பெருமைகளை இவ்வரலாறு சுருக்கமாக விளக்குகிறது. தலவரலாறுகள் வெளியிடச் செய்வதிலும், சமயப் பிரச்சாரம் செய்யச்செய்து சமய உண்மைகளைப் பரப்புவதிலும், பழுது பட்ட ஆலயங்களைப் புதுப்பிக்கச் செய்து மகா கும்பாபிஷேகங்கள் செய்யும்படி செய்வதிலும், சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாக்கா மிக்க ஊக்கம் காட்டி ஆவன செய்து வருகிறது அவர்களுக்கு நமது நன்றி. இந்த நூலில் கோவில் வரலாறும திருப்பதிகமும் சேர்க்கப்பட்டு உள்ளன. அன்பர்கள் படித்து ஆலமுண்டானின் அருளைப் பெறும்படியாகப் பிரார்த்திக்கின்றேன்

இங்ஙனம்,

**கோ. சிவஞானம் (அமரர்)**

சமயப் பிரசாரகர்

## உள்ளடக்கம்


1 தலமும இருப்பிடமும்
2 தலப் பெயர்கள்
3 கோயிலமைப்பு
4 மூர்த்திகள்
5 தீர்த்தங்கள்
6 தலப்பெருமை
7 புராண வரலாறும் வழிபட்டோரும்
8 சுற்றுக் கோயில்கள்
9 திருவிழாக்கள்
10 திருப்பணி
11 சமயப் பணி
12 சொத்துக்கள்
13 நிர்வாகம்
14 தேவாரப் பாடல்கள்
15 தட்சிணாமூர்த்தி அஷ்டகம்



---

## கோயில் விளக்கம்

| | | |
|---|---|---|
| கோவில் | — | திரு இரும்பூளை (ஆலங்குடி) |
| வினாயகர் | — | கலங்காமற் காத்த வினாயகர் |
| மூலவர் | — | ஆபத்சகாயர் (காசி ஆரண்யேஸ்வரர்) |
| அம்மன் | — | ஏலவார் குழலி |
| விசேடமூர்த்தி | — | குரு தக்ஷிணாமூர்த்தி |
| தல விருக்ஷம் | — | பூளைச்செடி |
| தீர்த்தம் | — | அமிர்த புஷ்கரணி |
| முக்கிய விழா | — | சித்திரை விழா |
| | — | குருப் பெயர்ச்சி |

**அருள்மிகு குருபகவானுக்கு பரிகார ஸ்தலம்**

# ஆலங்குடி ஸ்ரீ குரு தெக்ஷிணாமூர்த்தி



கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
    ஆறங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
    பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமாய் இருந்ததனை
    இருந்தபடி இருந்து காட்டி
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
    நினைந்துபவத் தொடக்கை வெல்வோம்

(பரஞ்சோதி மாமுனிவர்)

# பதிப்புரை

அருள்மிகு ஏலவார் குழலி அம்பிகை உடனுறை அருள்மிகு காசியாரண்யேசுரர் எழுந்தருளியுள்ள ஆலங்குடி என வழங்கும் திருஇரும்பூளை கோவிலின் பழம் பெருமைகளை இந்த வரலாறு சுருக்கமாகக் கூறுகிறது, இதனை தருமையாதீன சமயப் பிரசாரகர் திரு. கோ. சிவஞானம் அவர்கள் எளிய நடையில் எழுதிக்கொடுத்துள்ளார்கள் அருள்மிகு தக்ஷிணாமூர்த்தி அஷ்டகமும், அருள்மிகு ஏலவார் குழலி துதியும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது இப்பதிப்பு வெளிவர ஊக்கம் காட்டிய அனை வருக்கும் இத்திருக்கோயிலின் நன்றி உரித்தாகுக அன்பர்கள் படித்துப் பயன்பெறும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இங்ஙனம்,

ஆர். ராதாகிருஷ்ணன், B. Com.

செயல் அலுவலர்.

## அருள்மிகு தக்ஷிணாமூர்த்தி

மோனநிலை அமர்ந்திட்டே மும்மலத்தின் கட்டவிழ்த்து
முத்திக்கு வித்தாகும் மூலகுரு மூர்த்தியதாய்
தேனமுதப் பொருளாகி தென்முகமாய்த் தானமர்ந்து
தெவிட்டாத சின்மயத்தை தெளிவாக்கும் தென்னியனாய்
ஆனந்த நிலையாக ஆலின்கீழ் அமர்ந்தங்கே
அறமதனை நால்வருக்கும் அறிவிக்கும் ஐயனைத்
தானவனாய் ஆக்கிடுமோர் தற்பரமே தானாகும்
தக்ஷிணா மூர்த்தியின் தாள்பணிந்து சிரமேற்கொள்வாம்

## ஏலவார் குழலி வணக்கம்

அருந்தவஞ் செய் நால்வருக்கும் ஆலமர்ந்தே அறமுரைத்த
ஆரண்ய நாதர் கோயில்
வருந்தி வருவார் வினைதீர் வல்லபையை வரவிசுவா
மித்திரரும் வலஞ்செய் தேக
திருந்துமறை யந்தணர்கள் துதிபாடச் சம்பந்தர்
திருமுறையால் போற்றி செய்ய
இரும்பூவா வீற்றிருக்கும் எம்பிராட்டி ஏலவார்
குழலியை நாம் இறைஞ்சுவோமே

— தேவி தோத்திரங்கள்

சிவமயம்

# திருஇரும்பூளை

என்னும்

# ஆலங்குடி தல வரலாறு

## (குரு ஸ்தலம்)

## 1. தலமும் இருப்பிடமும்

வற்றாத நீர்ப்பெருக்கையுடைய காவிரி நதி பாயும் சோழ நாட்டிலே தஞ்சை மாவட்டத்திலே வலங்கைமான் வட்டாரத்திலே நீடாமங்கலம் ரயில் நிலையத்திற்கு வடக்கே 4-கல் தொலைவிலும், கும்பகோணத்திலிருந்து தெற்கே 11-கல் தொலைவிலும், கும்பகோணத்திலிருந்து மன்னார்குடி (நீடாமங்கலம் வழி) பஸ் மார்க்கத்தில் உள்ளது. பேருந்து வசதி உண்டு சோழ நாட்டில் உள்ள தேவாரப் பாடல்பெற்ற 274 தலங்களில் காவிரிக்குத் தென்கரையில் உள்ள 127 தலங்களில் 98-வது தலமாக விளங்கிவரும் தலமாகும்.

## 2. தலப் பெயர்கள்

காசி ஆரண்யம் — திருஇரும்பூளை — ஆலங்குடி என்ற பெயர்களால் வழங்கப்பெறுவது திருஞானசம்பந்தப் பெருந்தகையால் "எழிலார் இரும்பூளை" என அருளப் பெற்றது. பாற்கடல் கடைந்தபோது உண்டான ஆலகால விஷத்தைக் கண்டு அஞ்சி நடுங்கி அபயம் புகுந்த தேவர்கள் வேண்டுகோளுக்கு இரங்கிய சிவபெருமான் தோழனாகிய சுந்தரமூர்த்தியைக் கொண்டு விஷத்தைக் கொண்டுவரச் செய்து குடித்துக் கண்டத்து அடக்கியமையினால் அப்பெயர் பெற்றது இதை விளக்கும் காளமேகப் புலவர் பாடலும் இருக்கிறது அது

''ஆலங் குடியானை ஆலாலம் உண்டானை
ஆலங் குடியான் என்றுஆர்சொன்னார்—ஆலம்
குடியானே யாகில் குவலயத்தோ ரெல்லாம்
மடியாரோ மண்மீதினில்''

இவ்வூரில் விஷத்தால் எவருக்கும் யாதொரு தீங்கும் ஏற்படுவதில்லை.

## 3. கோயிலமைப்பு

கோயில், ஊரின் மத்தியிலே நான்கு புறமும் தாமரை பூத்த அகழியாலும், உயரமான மதில்களாலும் சூழப்பெற்று மிகவும் அழகான தோற்றத்துடன் கூடிய ஐந்து நிலை ராஜ கோபுரத்துடன் காட்சியளிக்கிறது தென்புரம் அமைந்த இந்தக் கோபுரத்தில் பழமையான சிற்பங்கள் நிறைந்திருக்கின்றன, கோபுர வாயிலுள்ளே பிரவேசித்ததும் மேலக் குடவரையில் கலங்காமல் காத்த விநாயகர் சன்னிதி அமைந்துள்ளது. அவரை வணங்கி உள்ளே நுழைந்தால் முதல் பிரகாரம் காணப்படுகின்றது. எதிரே அம்மையாரின் தெற்கு நோக்கிய சன்னிதி காணப்படுகின்றது. கொஞ்சம் உள்ளேபோய் மேற்கு நோக்கித் திரும்பி 2-வது வாயிலைக் கடந்ததும், உள்ளே தென்புறம உள்ள கீழத் திருமாளப் பத்தியில் சூரியர் சன்னிதி இருக்கிறது. தென்புறம் உற்சவ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அழகிய திருக்கோலத்துடன் அருள் பாலிக்கிறார். அடுத்தாற்போல் தெற்குத் திருமாளப்பத்தியில் (உள் பிரகாரத்தில்) நால்வர் திருவுருவமும, சூரியேசர் சோமேசர். குருமோக்ஷேசுரர் சோமநாதர், சப்தரிஷி நாதர், விஷ்ணுநாதர். பிரமேசர் ஆகிய சப்த லிங்கங்களோடு காசி விசுவநாதர் விசாலாக்ஷி, அகத்தியரும் உள்ளனர். மேலத் திருமாளப்பத்தியில், ஆக்ஞா கணபதி, சோமாஸ் கந்தர், பெரும் திருவுருவத்துடன் கூடிய கலங்காமல் காத்த விநாயகர், நின்ற கணபதி, சந்திரசேகரர், சுப்பிரமணியர் வள்ளி, தெய்வயானை, பக்தர், சண்டேசுரர் கல்யாண சாஸ்தா, ஸப்தமாதா முதலிய உற்சவர்களும், அடுத்த

முருகன், இலக்குமி இருப்பிடமும், வடக்குத் திருமாளப் பத்தியில் நவக்கிரஹம், சபாபதி, சிவகாமி அம்மை சம்பந்தர், அப்பர், மணிவாசகர் முதலியோரும காட்சி தருகிறார்கள் சபாநாதர் சன்னிதியில் திருமுறைக்கோயிலும் அமைந்துள்ளது. அடுத்து உத்ஸவ தக்ஷிணாமூர்த்தி, சனகாதி நால்வருடன் காட்சிதருகிறார். கீழ் திருமாளப்பத்தி வடபுறம் பைரவர், சந்திரன் சன்னிதியும் உள்ளது சுவாமி மகா மண்டபத்தில் நந்தி, பலிபீடம் (செப்புத் திருமேனி யுடன்) உள்ளது. மகா மண்டப வாயிலில் துவார பாலகரும் கருவறையில் கிழக்கு நோக்கி ஆபத்சகாயரும், அர்த்த மண்டபத்தில் பள்ளியறை சொக்கரும, போகசக்தி அம்மை யும் உள்ளனர் தெற்கு கோஷ்டத்தில் கணபதியும், அடுத்து இத்தலத்து சிறப்பு மூர்த்தியாகிய குரு தக்ஷிணாமூர்த்தி இருப்பிடமும், மேலக்கோஷ்டத்தில் லிங்கோத்பவரும். வட கோஷ்டத்தில் பிர்மா, துர்க்கை, சண்டேசுரரும் அடுத்து 'ஞானகூபம' என்னும் தீர்த்தக் கிணறும உள்ளன' வெளியே சுக்கிரவார அம்மன் சன்னிதியும் பள்ளியறையும் உள்ளன. தெற்கு நோக்கிய அம்மன் சன்னிதி தனியான பிரகாரத்துடன் உள்ளது. துவார சக்தி, செப்பு நந்தி பலி பீடமும், கீழ்ப்புறம் திருமாலைக்கட்டி மண்டபமும். மேற்கு நோக்கி சனீச்சுரர் சன்னிதியும், த்வஜ கணபதி. கொடி மரம், நந்தி பலிபீடமும், வடபுறம் வசந்த மண்டபமும் கீழ்ப்புறம் யாகசாலையும், பாகசாலையும். கீழத் திருவாயிலும் அடுத்து தென்புறம் வடக்கு பார்த்து சப்தமாதா ஆலயமும் வடபுறம் திரு நந்தவனமும் உள்ளது.

## 4. மூர்த்திகள்

| | |
|---|---|
| இறைவன் பெயர்கள் : | காசி ஆரண்யேசுரர் ஆபத்சகாயர் |
| இறைவி பெயர்கள் : | ஸ்ரீ உமையம்மை,<br>ஏலவார் குழலியம்மை |
| விசேட மூர்த்தி : | ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி |
| விசேட தலம் : | ஸ்ரீ குருமூர்த்தி பரிகார ஸ்தலம் |

## 5. தீர்த்தங்கள்

1. *பிரம்ம தீர்த்தம் :* தெற்கு சந்நிதியில் உள்ளது' அதில் தீர்த்த உத்ஸவ மண்டப அடித்தளம் மட்டும் காணப்படுகிறது.

2. *இலக்குமி தீர்த்தம் :* மேல வீதிக்கு மேல்புறம் உள்ளது அது ஆயக்குளம் என வழங்குகிறது.

3 *இந்திர தீர்த்தம் :* கீழ வீதிக்கு கீழ்புறம் உள்ளது, செட்டித்தோப்பு குளம என வழங்குகிறது.

4. *அக்கினி தீர்த்தம் :* அருகில் உள்ள கிராமமாகிய பூனுயிருப்பில் உள்ளது.

5. *யம தீர்த்தம் :* அருகில் உள்ள நரிக்குடி என்ற கிராமத்தில் உள்ளது

6. *நிருதீ தீசத்தம் :* அருகில் உள்ள புலவநத்தம் கிராமத்தில் உள்ளது.

7. *வருண தீர்த்தம் :* அருகில் உள்ள பூந்தோட்டம் கிராமத்தில் உள்ளது.

8. *வாயு தீர்த்தம் :* அருகில் உள்ள மருதூர் கிராமத்தில் உள்ளது

9. *குபேர தீர்த்தம் ;* அருகில் உள்ள கீழ அமராவதி கிராமத்தில் உள்ளது.

10. *ஈசான தீர்த்தம் :* அருகில் உள்ள சித்தன்வாழூர் கிராமத்தில் உள்ளது

11. *சூரிய தீர்த்தமும்,* 12. *சந்திர தீர்த்தமும்* கீழ்த்திசையில் உள்ளன. இரண்டு தீர்த்தங்களும் இருந்த இடங்கள் சோமேசுரம் என்றும் சூரியேசுரம் என்றும் வழங்கப்பெறுகின்றன.

13. *அமுதபுட்கரனி* : ஆலயத்தைச் சுற்றி அகழியாக உள்ளது

14. *ஞானகூபம் கிணறு* : சுவாமி மகா மண்டபத்தில் திருமஞ்சனக் கேணியாக உள்ளது

15. *பூளை வள ஆறு* : கிழக்கில் உள்ளது. துலா மாதத்தில் இதன் தீர்த்தத்தைக்கொண்டு வந்து இறைவனுக்கு அபிஷேகம் செய்துவருகிறுர்கள்.

## 6. தலப் பெருமை

இந்தத் தலம் காவிரி நதியின் தென்கரையில் ஒரு காத தொலைவில் உள்ளது சீரும் சிறப்பும் பெற்றது. தேவர்கள் அமுதம் கடைந்தபோது ஏற்பட்ட விஷத்திஞல் அவதியுற்று ஆண்டவனை வழிபட, ஆலமாகிய விஷத்தைக் குடித்துக் காத்தமையால், இவ்வூருக்கு ஆலங்குடி எனவும், இறைவனுக்கு 'ஆபத்சகாயர்' எனவும் பெயர் வழங்கப்படுகின்றது இந்த ஊரில் அரவு தீண்டி மரித்தவர் இல்லை கஜமுகாசுரஞல் தேவர்களுக்கு நேர்ந்த இடுக்கண்களைக் களைந்து காத்தமையால் இத்தல விஞயகருக்கு 'கலங்காமல் காத்த விஞயகர்' எனப்பெயர் உண்டாயிற்று. அம்மையார் தவம் செய்து இறைவனை திருமணம் செய்துகொண்ட சிறப்பை உடையது அம்மை திருமணம் நடந்த இடத்திற்கு இன்று திருமண மங்கலம் எனப் பெயர் வழங்கப்பெறுகிறது. மத்தியார்ச்சுன மகாலிங்கப் பெருமானுக்குப் பரிவார தலமாக உள்ளது. திருஇடைமருதூருக்குப் பரிவார தலங்களாவன : 1 திருவலஞ்சுழி (விஞயகர்) 2 திருவேரகம் (முருகன்) 3 திருவாவடுதுறை (நந்தி) 4 சூரியஞர் கோவில் (நவக்கிரகம்) 5 திருவாப்பாடி (சண்டேசுரர்) 6 சிதம்பரம் (நடராஜர்) 7 சீர்காழி (பைரவர்) 8 திருவாரூர் (சோமாஸ்கந்தர்-தியாகேசன்) 9 ஆலங்குடி (தக்ஷிணமூர்த்தி) பஞ்சவாரண்ய தலங்களாகிய 1 திருக்கருகாவூர் 2 திருஅவளிவநல்லூர் 3 திருஅரதைப்பெரும்பாழி

4 திருஇரும்பூளை என்கிற ஆலங்குடி 5 திருக்கொள்ளம் புதூர் — இவைகளில் நான்காவது தலமாக உள்ளது. *விசுவாமித்திரர்* பூசித்த தலம். அம்மையின் திருமணத்திற்கு வந்த திருமால், பிரமா, இலக்குமி, கருடன், அஷ்டதிக்கு பாலகர், ஐயனார், வீரபத்தரர் முதலானோர் தம தம் பெயரால் லிங்கங்கள் நிறுவி பூசித்து வழிபட்ட தலம் முசுகுந்த சக்கரவர்த்தி, சுவாசனன், சுந்தரர் முதலியோர் வழிபட்ட தலம, *திருஞானசம்பந்தரால்* பதிகம் பெற்றது. *அப்பர் அடிகளால் திருவீழிமிழலைத்* திருத்தாண்டகத்தில் சேர்த்துப் பாடப்பெற்ற சிறப்புடையது. திருஞான சம்பந்தர் தமது பாடல்களால் இத்தல அம்மனை சிறப்பித்து பாடியுள்ளார்

## 7 புராண வரலாறும், வழிபட்டோரும்

*சுந்தரர் :* பல தலங்களையும் தரிசித்து, இந்தத் தலத்துக்கு வந்துகொண்டிருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் அகத்திய காவேரி என்னும் வெட்டாறு, வெள்ளப்பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்த காரணத்தால், கரையில் அடியார் களுடன் மனம் கலங்கி நிற்க, காசியாரண்யேஸ்வரராகிய ஆபத்சகாயர் ஓடக்காரனாக வந்து இக்கரைக்குக் கொண்டு விடுவதாகச் சொல்லி பவுன்கள் பெற்று, முதலில் அடியார் களில் சிலரை இக்கரை கொண்டுவந்து சேர்த்து மீண்டும் சுந்தரரிடம போய் அடையாளச் சன்மானம் கேட்டுப் பெற்று அவரை ஏற்றி வருகையில் நடு ஆற்றில் திருவிளை யாடலாக சுழல் ஏற்படும்படி செய்து, பற்றுக்கோலை நழுவ விட்டு எடுப்பதைப் போல் பாசாங்கு செய்து தானும் தண்ணீரில் விழுந்து தத்தளிப்பவன் போல் நிற்க, படகில் உள்ள நாயனார் இறைவனை வேண்ட ஓடம் சிறிது தூரம் சென்று பாறையில் மோதி நொறுங்கியது சிவபெருமான் ரிஷபாருடராகத் தோன்றி யாவரையும் தூக்கி காப்பாற்றி யதாக வரலாறு வழங்குகிறது பின்பு சுந்தரர் தலத்துக்கு வந்து முறைப்படி வணங்கி வழிபட்டு தக்ஷிணாமூர்த்தியைத் தரிசித்து ஞானோபதேசம் பெற்றார். இந்தத் தலத்தில் உள்ள குருமூர்த்தியைக் குருவாரத்தில் வணங்கி வழிபடுவோருக்கு சிவஞானம் எளிதில் கைகூடும். மீண்டும் சுந்தரமூர்த்தி

ஸ்வாமிகள் அடியார்கள் கூட்டத்துடன் அரலூர் கார்கோட கேஸ்வரரை வழிபட்டு நீடாமங்கலத்திலுள்ள சக்ரவாகப் பக்ஷியால் பூசிக்கப்பெற்ற கோமுகேஸ்வரரை வழிபட்டார்.

திருவாரூரில் நடைபெறும் விழாவில் அப்பொழுது அரசாண்ட ஈச சோழராஜா எல்லாத் தலங்களிலும் உள்ள சுந்தரமூர்த்தி திருவுருவங்களைக் கொண்டுவந்து விழா நடத்தினன். எல்லா சுந்தரமூர்த்திகளையும்விட ஆலங்குடியில் உள்ள சுந்தரர் திருஉரு அவன் மனதைக் கவர்ந்து விட்டது அதைத் திருவாரூரிலேயே வைக்கவேண்டுமென்று விரும்பினன். அதை அறிந்த ஆலங்குடி ஆதி சைவசிவாச்சாரியார்கள் குழந்தைக்கு அம்மை போட்டிருப்பது போல் தொட்டில் கட்டி ஆலங்குடி கொண்டுவந்து சேர்த்தார்கள். அந்த அம்மைத் தழும்புகளை இன்றும் பெருமாள் மீது காணலாம்.

வழிபட்டோர்கள் : ஆதிசங்கரர் குருமூர்த்தியைத் தரிசித்து சிவஞானம் பெற்ருர். இந்திரன் முதலிய அஷ்டதிக்கு பாலர்கள் இறைவனை வழிபட்டுத் தம பெயரால் தீர்த்தமும் சிவலிங்கமும் நிறுவி பூசித்து, தங்களுக்கு ஏற்பட்ட இடர்பாடுகள் நீங்கிப் பேறுபெற்ருர்கள். சுவாசனன் என்ற அரசன் பஞ்சமாபாதங்களை அஞ்சாமல் செய்து அழிந்து நரகம் அடைந்து துன்புற்று. பின், பூலோகத்தில் பைசாசமாக அலையும்போது, முன் நல்வினையால் அகத்தியரைச் சந்தித்து அவரையும துன்புறுத்த முயலும்போது, அவர் உபதேசித்த படி இத்தலத்தை அடைந்து தீர்த்தமாடி வழிபட்டு, இழந்த செல்வத்தையும பேரரசையும் திரும்பப் பெற்றான் பார்வதியார் கைலாசத்தில் பார்வதி அம்மையார் தோழியர் களோடு பந்தாடியபோது உயரப்போன பந்தை பிடிக்கக் கையை உயரத் தூக்கி பந்தை எதிர்பார்த்து நிற்க, வான வீதியில் சென்ற சூரியன் தன்னை நிற்கச் சொல்வதாகக் கருதி தேரை நிறுத்த, அவன் தொழில் தடைபட்டு உலகம் அவதியுற்று சிவபெருமானிடம் முறையிட அவர் சாபத்தின் காரணமாகப் பூலோகத்தில் காசியாரண்ய தலத்தில் அவ

தரித்து, தவம்செய்து, இறைவனைத் திருமணம் செய்து கொண்டார். முசுகுந்தச் சக்கரவர்த்தி: முசுகுந்தச் சக்கரவர்த்தி தன் மந்திரியும் சிவபக்தருமான அமுதோகர் என்பவருடைய சிவ புண்யத்தில் பாதியேனும் தனக்குத் தத்தம் செய்யும்படி கேட்க, மந்திரி சம்மதியாமையால், அவர் தலையைக் கொய்யும்படி உத்தரவிட, கொலைஞர் வாளேந்தியவுடன் சிவனுணையால் உயிர் உடனே நீங்கவும். இதன் அடையாளமாக அமுதோகன் என்ற சப்தம் தலம் முழுவதும் சூடிகொள்ள, அரசன் வியந்து, அபசாரத்தை நினைந்து வழிபட்டு இத்தலத்து இறைவனை வணங்கிப் பாபம் நீங்கப் பெற்றான்,

## 8. சுற்றுக் கோயில்கள்

கிழக் கோபுர வாயில் தென்புறம் சப்த மாதாவின் ஆலயமும், ஈசான்ய திக்கில் பாதாள பைரவி காளியம்மன் ஆலயமும், தெற்குக் கோபுரவாயில் கீழ்ப்புறம் மேற்கு நோக்கி கல்யாண சாஸ்தா ஆலயமும், தேர்முட்டிக்கருகில் கிழக்கு நோக்கியுள்ள ஆலயத்தில் கல்யாண வீரபத்ரரும் தக்ஷன் விநாயகர் சன்னதியும் உள்ளன.

## 9. திருவிழாக்கள்

பஞ்ச பருவ உற்சவம், மாதாந்திர குருவாரந்தோறும் விசேஷ தெரிசனமும், குருபகவான் ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்கு பிரவேசிக்கும் காலங்களிலும், (குருப் பெயர்ச்சி) பிரதி வருஷ மாசி குருவாரத்தில் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனையும் நடைபெறுகிறது. சித்திரைப் பவுர்ணமியைக் கொண்டு பத்துநாள் விழாவும் தக்ஷிணாமூர்த்திக்கு தேர் விழாவும் கொண்டாடப்படுகின்றது தைப்பூசம், பங்குனி உத்திரத்தில் தீர்த்தவாரியும் நடைபெறுகிறது.

## 10 திருப்பணி

இவ்வாலயம் சிலமுற்று இருந்தது. தேவகோட்டை சிவநேயச் செல்வர் திரு. பழ. செ. பழ லெட்சுமணன் செட்டியார் - பழனியப்ப செட்டியார் சகோதரர்களால் சுமார் ஐந்து லட்ச ரூபாய் செலவில் சிறந்த திருப்பணி செய்து பிரமோதூத வைகாசித் திங்களில் சுமார் நாற்பதினாயிரம் செலவில் (1930-ம் ஆண்டு) கும்பாபிஷேகமும் சிறப்புறச் செய்யப்பட்டு இருக்கிறது. தற்போது திருப்பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

## 11. சமயப்பணி

விசேட உற்சவ காலங்களில் சமயப் பிரச்சாரகர்களைக் கொண்டு சமயப் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

## 12. சொத்துக்கள்

நஞ்சை நிலம் — 112 ஏ. 27 செ.
புஞ்சை நிலம் — 48 ஏ. 44 செ.

## 13. நிர்வாகம்

சென்னை இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமிக்கப்படும் தர்மகர்த்தாக்களும், தஞ்சாவூர் H R & C E (Adm) Dept துணை ஆணையர் அவர்களின் ஸ்கீம் R.C.O.A No. 155/59 C. S. தேதி 14—2—63-படி நிர்வாக அதிகாரிகளும் இவ்வாலயத்தை நன்கு நிர்வகித்து வருகிறார்கள்.

# திருஇரும்பூளைப் பதிகங்கள்

## திருஞானசம்பந்த ஸ்வாமிகள் திருப்பதிகம்

### வினாவுரை

**2-ம் திருமுறை]** **[பண் - இந்தளம் †**

*திருச்சிற்றம்பலம்*

*சீரார் கழலே தொழுவீ ரிதுசெப்பீர்*
*வாரார் முலைமங் கையொடும் உடனாகி*
*ஏரா ரிரும்பூ ளையிடங் கொண்டஈசன்*
*காரார் கடல்நஞ் சமுதுண் டகருத்தே* 1

*தொலழார் கழலே தொழுதொண் டர்கள்சொல்லீர்*
*குழலார் மொழிக்கோல் வளையோ டுடனாகி*
*எழிலா ரிரும்பூ ளையிடங் கொண்டஈசன்*
*சுழல்தான் கரிகா னிடையா டுகருத்தே* 2

*அன்பா லடிகை தொழுவீ ரறியீரே*
*மின்போல் மருங்குல் மடவா ளொடுமேவி*
*இன்பா யிரும்பூ ளையிடங் கொண்டஈசன்*
*பொன்போற் சடையிற் புனல்வைத்த பொருளே* 3

*நச்சித் தொழுவீர் கள்நமக் கிதுசொல்லீர்*
*கச்சிப் பொலிகா மக்கொடி யுடன்கூடி*
*இச்சித் திரும்பூ ளையிடங் கொண்டஈசன்*
*உச்சித் தலையிற் பலிகொண் டுழலூணே* 4

*சுற்றார்த் தடியே தொழுவீ ரிதுசொல்லீர்*
*நற்றாள் குழல்நங் கையொடும் உடனாகி*
*என்றே யிரும்பூ ளையிடங் கொண்டஈசன்*
*புற்றா டரவோ டென்புபூண் டபொருளே* 5

---

† இப்பதிகத்தில் 7-ம் செய்யுள் மறைந்து போயிற்று

தோடார் மலர்தூர்த் தொழுந்தொண் டர்கள்சொல்லீர்
சோடார் குழற்சே யிழையோ டுடனாகி
ஈடா யிரும்பூ ளையிடங் கொண்டஈசன்
காடார் கடுவே டுவனா னகருத்தே 6-7

ஒருக்கும் மனத்தன் பருள்ளீ ரிதுசொல்லீர்
பருக்கைகம் மதவே ழமுரித் துமையோடும்
இருக்கை யிரும்பூ ளையிடங் கொண்டஈசன்
அரக்கன் உரந்தீர்த் தருளாக் கியவாறே 8

துயரா யினநீங் கித்தொழுந் தொண்டர்சொல்லீர்
கயலார் கருங்கண் ணியோடும் உடனாகி
இயல்பா யிரும்பூ ளையிடங் கொண்டஈசன்
முயல்வா ரிருவர்க் கெரியா கியமொய்ம்பே 9

துணைநன் மலர்தூய்த் தொழுந்தொண் டர்கள்சொல்லீர்
பணைமென் முலைப்பார்ப் பதியோ டுடனாகி
இணையில் யிரும்பூ ளையிடங் கொண்டஈசன்
அணைவில் சமண்சாக் கியமாக் கியவாறே 10

எந்தை யிரும்பூ ளையிடங் கொண்டஈசன்
சந்தம் பயில்சண் பையுண்ஞா னசம்பந்தன்
செத்தண் தமிழ்செப் பியபத் திவைவல்லார்
பந்தம் மறுத்தோங் குவர்பான் மையினாலே
திருச்சிற்றம்பலம் 11



## திருநாவுக்கரசு ஸ்வாமிகள் திருப்பதிகம்

6-ம் திருமுறை] [திருவீழிமிழலை திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பெரும்புலியூர் விரும்பினார் பெரும்பா ழியார்
பெரும்பற்றப் புலியூர் மூலட் டானத்தார்
இரும்புதலார் இரும்பூளை யுள்ளார் ஏரார்
இன்னம்ப ரார்ஈங்கோய் மலையார் இன்சொற்
கரும்பனையாள் உமையோடுங் கருகா வூரார்
கருப்பறிய லூரார் கரவீ ரத்தார்
விரும்பமரர் இரவுபகல் பரவி யேத்த
வீழி மிழலையே மேவி னாரே

திருச்சிற்றம்பலம்

## பெரியபுராணம்

திருச்சிற்றம்பலம்

தேவர்பிரா னமர்ந்திரு விரும்பூளை சென்றெய்தக்
காவணநீ டோரணங்க ளொட்டியுடன் களிசிறப்பப்
பூவணமா லைகளேற்றிப் பூரணபொற் குடநிரை
கியாவர்களும் போற்றிசைப்பத் திருத்தொண்ட
ரெதிர்கொண்டார்

திருச்சிற்றம்பலம்

[திருஞானசம்பந்தர் புராணம் - 400]

உ

குருபாதம்

# ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி திருவருட்பா

பூங்கமல வதனமும் பொழிகருணை நயனமும்
புன்முறுவல் நிலவெ றிப்பும
பொலிசடா டவியுமதி லுறைநிலா மதியுமொளி
புனைகுழை யிலங்கு காதும்
தேங்குபர மானந்த சின்மயா காயமாஞ்
சித்தியருண் முத்தி ரையுமேற்
சிவாநுபவ நீங்கினோர் சேரவருள் செபமாலை
சிவஞான புத்த கமுமோர்
வேங்கையத ளுடையுஞ்ச ரற்கால மதிகோடி
வெள்ளமென நிறைவ டிவமும்
மேலான தெய்வநீ யின்றிவே றில்லையிது
மெய்யென் றெடுத்த கனலும்
ஓங்கவட வாலடியி லுறைகின்ற தெய்வமே
யுனையன்றி வேறு நினையேன்
ஒன்றாகி ஆனந்த வுருவாகி என்னுயிர்க்
குயிரான பரம சிவமே

சீராரு நின்சரண தேசோ மயானந்த
தெரிசனங் காட்டு பகலே
தேகாதி யாகும்ப்ர பஞ்சவிருளாகிய
திண்டாடு மும்ம லப்பேய்
போராடு தென்னுடன் நானேழை யதனுடன்
போராட முடிவ தில்லை
புலையாட லொருநாள் ளிரண்டுநா ளோவிது
பொருக்கவும் முடிவ தில்லை

யாரோடு சொல்லியென் குறையாறு வேனெனக்
    கன்னையே யப்ப னேஉன்
ஆறுதலை யன்றிவே றில்லை நீ நழுவவிடின்
    அடியனே னலைந்து போவேன்
ஓராவி னிழலை லுறைந்துசன காதியர்க்
    குள்ளபடி யருள் தெய்வமே
யொன்ருகி யானந்த வுருவாகி யென்னுயிர்க்
    குயிரான பரம சிவமே 2

இரவிசத கோடிக ளிருட்டென்ன வேவெயி
    லெறிக்கும்பர சண்ட பானு
வெண்ணிலா மதிவடவை யென்னவே குளிர்நிலா
    வெழுகின்ற சந்த்ரோ தயம்
அரிபிரம ரிந்த்ராதி செல்வநல் குரவென்னும்
    அளவிலாப் பெரிய செல்வம்
அண்டகோ டிகளையணு வென்றகுண மேருகிரி
    அமுதைவேம் பென்ற வமுதம்
பெரியபர மப்பிரள யஞ்சிறிய துளியென்று
    பேசுங்கரு பாம்பு ராசி
பிரபஞ்ச மனிதலுள தெய்வமெல் லாமும்
    பிறந்தலையு மெனந கைத்தே
உருவினி லஞுதியே யுற்றசித் ருபியா
    யுறைகின்ற பரதெய் வமே
யொன்ருகி யானந்த வுருவாகி யென்னுயிர்க்
    குயிரான பரம சிவமே 3

தந்த்ரகலை யறிவஞே மந்த்ரகலை யறிவஞே
    சாருமுப தேச கலையிற்
றந்தகயி லாசபா ரம்பரிய மாகவரு
    சம்ப்ரதா யம்ம றிவஞே

அந்தரத் துயர்மலைத் தேனினுக் கோர்முடவன்
ஆசைவைத் ததுபோ லவே
ஐயனே நின்னருளை யடைவதற் காசைவைத்
தடியன் முகம்வீங்கி நின்றேன்
சந்த்ரசே கரசகள நிட்கள தயாபர
சதாசிவ சிதாகா யமாஞ்
சபாநாத சுந்தர அனந்தகல் யாணகுண
சர்வேச தேவ தேவே
உந்துந் தரங்கமெறி கங்காத ரகயிலை
யுறைகின்ற பரதெய் வமே
யொன்றாகி யானந்த வுருவாகி யென்னுயிர்க்
குயிரான பரம சிவமே 4

பொல்லாத பாவங்கள் கோடான கோடியிப்
புவிமிசையி லோர்வடி வமாம்
புலையனே னுனைமறந் தனுதினஞ் செய்துவரும்
பொல்லாத வினையெண் ணிலேன்
அல்லாரு மலமாயை கருமங்க ளணுகாத
வகளநிட் பிரபஞ் சமாம்
அகளங்க சுத்தநித் தியானந்த அநுபவம்
அணுவளவு வந்த தில்லை
நல்லார்மு னணுகாத யமதூதர் கொண்டுபோய்
நரகிலே விடுவ ரென்று
நடுநடுங் காநின்ற துள்ளமுனை நம்பினேன்
நம்பினேன் வடகயி லையாய்
உல்லாச பரமகுரு நாதனே யாலடியில்
உறைகின்ற பரதெய் வமே
ஒன்றாகி யானந்த வுருவாகி யென்னுயிர்க்
குயிரான பரம சிவமே 5

பெரியபர மானந்த பரமசுக வாழ்விப்
    பிறப்பிலே வருவ தன்றிப்
பிரபஞ்ச வாழ்க்கையெல் லாமும்விட் டுதறியே
    பெண்ணாசை மண்ணு சையும்
இரணியத் தாசையுஞ் சீயென்று விட்டெறிந்
    தேகாந்த மாயி ருந்தால்
இவ்வுலகி லிடரேது மில்லாமல் வருமின்ப
    மியாவர்க்கு மில்லை யென்று
தெரியமறை சொல்லவும் பெரியவர்கள் சொல்லவும்
    தீரத் துறந்தி ராத
சிறியனிவ னென்றோ பராமுகம தாகவே
    தேவரீர் நின்ற செய்தி
யுரியதுற வுடன்ஞான முதவுவது நீயன்றி
    யொருதெய்வம் வேறில் லையே
யொன்றாகி யானந்த வுருவாகி யென்னுயிர்க்
    குயிரான பரம சிவமே 6

சரியைதனில் வல்லனோ கிரியைதனில் வல்லனோ
    தகுயோக மதில் வல்லனோ
தவமதனில் வல்லனோ வுபரதியில் வல்லனோ
    தருபக்தி தனில்வல் லனோ
அரிபிரமர் காணு வகண்டபூ ரணசச்சி
    தானந்த சிவஞா னமா
மதையுணர வல்லனோ வாகாத பிரபஞ்சு
    மதையுணரும் வல்லமை யிலே
பெரியனே யாயினு மேலான வநுபவம்
    பெற்றவர்கள் போலி ருந்து
பெருங்கபட நாடக நடிப்பேற்கு நின்னருட்
    பிரகாச மாகு மோசொல்

உரியபர மானந்த நிர்த்தனே வடகயிலை
யுறைகின்ற பரதெய் வமே
ஒன்றாகி யானந்த வுருவாகி யென்னுயிர்க்
குயிரான பரம சிவமே 7

மோகந் தரித்தவர்கள் மாதரைக் கூடியே
மோகந் தணிப்ப ரதுபோல்
முதுபசி தரித்தவர்க ளன்னம்பு சித்துலகின்
முதுபசி தணிப்ப ரதுபோல்
பாகந் தரித்தவர்கள் சற்குருவி னோக்கப்
பயோததி படிந்தே பிர
பஞ்சவெப் பத்தணிப் பார்களென் றாகமம்
பலகலைகள் சொல்ல வுங்கேட்
டாகந் தரித்த வடவையாற் சூடுண்டெ
னையனே நின்க டைக்கண்
ஆனந்த வருண்மழையின் மூழ்கவழி பாராம
லவமாக நாள்க ழித்தேன்
ஊகங் கொடுத்தருளை யடையும்வகை யருளுவா
யோங்கு குரு பரநாதனே
ஒன்றாகி யானந்த வுருவாகி யென்னுயிர்க்
குயிரான பரம சிவமே 8

பொன்னினை விழுங்குமொரு ரசகுளிகை போலவும்
பூதவிரு டனைவி ழுங்கும்
பூர்ணசந்த் ரோதயம் போலவும் சந்திரன்
பொன்னொளி யையும் விழுங்கும்
மன்னுமா யிரகோடி சூரியர்கள் போலவும்
வல்லிரும் பினைவி ழுங்கும்
மண்டுகனல் போலவும் உப்பினை விழுங்கிடும்
வாரிநீ ரைப்போ லவும்

என்னைநீ யுள்விழுங் கிக்கொண் டிருப்பதினி
யெக்கால மெக்கால மென்
றேழையே னழுதழுது வாடவும் திருவுள்ளம்
இன்னமு மிரங்க விலையே
உன்னரு ளிரங்குநா ளெந்தநா ளாலடியில்
உறைகின்ற பரதெய் வமே
ஒன்ருகி யானந்த வுருவாகி யென்னுயிர்க்
குயிரான பரம சிவமே. 9

அண்டர்தொழு மிந்த்ராதி வாழ்வையும் விரும்பிடேன்
அட்டசித் தியும்வி ரும்பேன்
அகிலகலை ஞானமும் விரும்பிடேன் உலகுபுகழ்
அரியகீர்த் தியும்வி ரும்பேன்
பண்டைமல மெல்லா மொழித்துநின் னருள்பெற்ற
பழையவடி யார்க ளடியார்
பாததா மரைகளென் தலையின்மேல் வைத்தருட்
பார்வையா லிருள கற்றித்
தொண்டுசெய் தரியபர மானந்த வெள்ளந்
துதைந்துவிளை யாடி யுலகந்
தோன்ரும லிறுமாந் திருக்கின்ற பெருவாழ்வு
தொண்டனேன் வேண்டி னன்வண்
டுண்டிடுங் கொன்றையணி யண்டர்நா யககயிலை
யுறைகின்ற பரதெய் வமே
ஒன்ருகி யானந்த வுருவாகி யென்னுயிர்க்
குயிரான பரம சிவமே. 10



# நவ நாயகர்களின் பெருமை

**சூரியன் :**

காசிப முனிவரின் புத்திரர் ஒளிப் பிழம்பானவர், நவக்கிரகங்களில் முதன்மை பெற்றவர்.

| | | |
|---|---|---|
| ராசி | .... | சிம்மராசிக்கதிபதி |
| திக்கு | .... | நவக்கிரகங்களுக்கு நடு |
| அதிதேவதை | ... | அக்கினி |
| பிரத்யதிதேவதை | . | உருத்திரன் |
| தலம் | .... | சூரியனார்கோயில் |
| நிறம் | .... | சிவப்பு |
| வாகனம் | ... | ஏழு குதிரைகள் பூட்டிய ரதம் |
| தானியம் | .... | கோதுமை |
| மலர் | .... | செந்தாமரை, எருக்கு |
| வஸ்திரம் | .... | சிவப்புக்கரை ஆடை |
| ரத்தினம | .... | மாணிக்கம் |
| அன்னம் | .... | கோதுமை, ரவா, சர்க்கரைப் பொங்கல் |

**சந்திரன் :**

பாற்கடலில் தோன்றியவர் தண்ணொளியுடையவர். வளர்பிறையில் சுபராகவும். தேய்பிறையில் பாபராகவும் விளங்குபவர்.

| | | |
|---|---|---|
| ராசி | .... | கடக ராசிக்கு அதிபதி |
| திக்கு | .... | தென் கிழக்கு |
| அதிதேவதை | .... | நீர் |
| பிரத்யதி தேவதை | .... | கௌரி |
| தலம் | .... | திருப்பதி |
| நிறம் | .... | வெள்ளை |
| வாகனம் | .... | வெள்ளைக் குதிரை |
| தானியம் | .... | நெல் (பச்சரிசி) |
| மலர் | .... | வெள்ளை அரளி, வெள்ளல்லி |
| வஸ்திரம் | .... | வெள்ளையாடை |
| ரத்தினம் | .... | முத்து |
| அன்னம் | .... | தயிர் அன்னம் |

செவ்வாயி

அங்காரகன் : இவர் வீரபத்திரர் அம்சம், தெய்வம் சுப்ரமணியர். பாவபலனைக்கொடுக்கும் குரூரர்

| | | |
|---|---|---|
| ராசி | ... | மேஷம் விருச்சிக ராசிகளுக்கதிபதி |
| திக்கு | ... | தெற்கு |
| அதிதேவதை | ... | நிலமகள் |
| பிரத்யதிதேவதை | ... | க்ஷேத்திர பாலகன் |
| தலம் | ... | வைத்தீஸ்வரன்கோயில் |
| நிறம் | .. | சிவப்பு |
| வாகனம் | ... | ஆட்டுக்கிடா |
| தானியம் | ... | துவரை |
| மலர் | ... | சண்பகம், சிவப்பு அரளி |
| வஸ்திரம் | ... | சிவப்பு ஆடை |
| ரத்தினம் | ... | பவழம் |
| அன்னம் | ... | துவரம் பருப்புப் பொடி சாதம (காரம) |

புதன்

இவர் சந்திரனுடைய குமாரர். தீய கிரகங்கள் விளைவிக்கும் பீடைகளை அளிக்கும் ஆற்றல் உடையவர்.

| | | |
|---|---|---|
| ராசி | ... | மிதுனம் கன்னி ராசிக்கு அதிபதி |
| திக்கு | ... | வடகிழக்கு |
| அதிதேவதை | ... | விஷ்ணு |
| பிரத்யதிதேவதை | ... | நாராயணன் |
| தலம் | ... | மதுரை |
| நிறம் | ... | வெளிர் பச்சை |
| வாகனம் | ... | குதிரை |
| தானியம் | ... | பச்சைப் பயறு |
| மலர் | ... | வெண்காந்தள் |
| வஸ்திரம் | ... | பசுமையாடை |
| ரத்தினம் | ... | மரகதம் |
| அன்னம் | ... | பாசிப் பருப்புப் பெட்டி சாதம் (காரம்) |

குரு

இவர் தேவகுரு. இவருடைய பார்வையால் தோஷங்கள் அனைத்தும் நீங்கும், பூர்ணசுபர்.

| | | |
|---|---|---|
| ராசி | .... | தனுசு மீனராசிகளுக்கதிபதி |
| திக்கு | — | வடக்கு |
| அதிதேவதை | — | பிரமன் |
| பிரத்யதிதேவதை | — | இந்திரன் |
| தலம் | .... | (திருச்செந்தூர்) ஆலங்குடி |
| நிறம் | .... | மஞ்சள் |
| வாகனம் | — | மீனம் |
| தானியம் | — | கடலை |
| மலர் | — | முல்லை |
| வஸ்திரம் | — | மஞ்சள் ஆடை |
| ரத்தினம் | — | புஷ்பராகம் |
| அன்னம் | .... | கடலைப் பொடி சாதம் (காரம்) |

சுக்கிரன்

இவர் அசுரகுரு. இவரை மழைக்கோள் என்று அழைப்பர். சுபர்.

| | | |
|---|---|---|
| ராசி | — | ரிஷபம் துலாம ராசிகளுக்கதிபதி |
| திக்கு | — | கிழக்கு |
| அதிதேவதை | — | இந்திராணி |
| பிரத்யதிதேவதை | — | இந்திர மருத்துவன் |
| தலம் | — | ஸ்ரீரங்கம் |
| நிறம் | .... | வெள்ளை |
| வாகனம் | — | முதலை |
| தானியம | — | மொச்சை |
| மலர் | — | வெண்தாமரை |
| வஸ்திரம் | ... | வெள்ளையாடை |
| ரத்தினம் | — | வைரம் |
| அன்னம் | — | மொச்சைப்பொடி சாதம் |

சனி

இவர் சூரியனுடைய குமாரர். பாவபலன் தருவதில் பெற்றவர். ஈஸ்வர பட்டம் பெற்றவர்.

| | | |
|---|---|---|
| ராசி | — | மகர, கும்ப ராசிகளுக்கதிபதி |
| திக்கு | — | மேற்கு |
| அதிதேவதை | — | இயமன் |
| பிரத்யதிதேவதை | — | பிரஜாபதி |
| தலம் | — | திருநள்ளாறு |
| நிறம் | — | கருமை |
| வாகனம் | — | காகம் |
| தானியம் | — | எள்ளு |
| மலர் | .... | கருங்குவளை, வன்னி |
| வஸ்திரம் | — | கருப்பு நிற ஆடை |
| ரத்தினம் | — | நீலம் |
| அன்னம் | — | எள்ளுப்பொடி சாதம் (காரம்) |
| தீபம் | .... | எள்ளு முடிச்சு தீபம் |

ராகு

அசுரத் தலையும், நாகவுடலும் உடையவர். மிக்க வீரம் உடையவர், கருநாகம் என்று அழைக்கப்படுவர்

| | | |
|---|---|---|
| திக்கு | — | தென்மேற்கு |
| அதிதேவதை | — | பசு |
| பிரத்யதிதேவதை | — | பாம்பு |
| தலம் | — | காளத்தி |
| நிறம் | — | கருமை |
| வாகனம் | — | நீலசிம்மம் |
| தானியம் | — | உளுந்து |
| மலர் | — | மந்தாரை |
| வஸ்திரம் | — | கருப்புநிற ஆடை |
| ரத்தினம் | — | கோமேதகம் |
| அன்னம் | — | உளுத்தம் பருப்புப் பொடி சாதம் (காரம்) |

**கேது**

இவர் நாகத் தலையும், அசுர உடலும் உடையவர். சிகி என்றும், செந்நாகம் என்று அழைக்கப்படுவர்

| | | |
|---|---|---|
| திக்கு | — | வடமேற்கு |
| அதிதேவதை | — | சித்திரகுப்தன் |
| பிரத்யதிதேவதை | — | பிரமன் |
| தலம் | — | காளத்தி |
| நிறம் | — | செம்மை |
| வாகனம் | — | கழுகு |
| தானியம் | — | கொள்ளு |
| மலர் | — | செவ்வல்லி |
| வஸ்திரம் | — | பலநிற ஆடை |
| ரத்தினம் | — | வைடூரியம் |
| அன்னம் | — | கொள்ளுப்பொடி சாதம் |

## நவக்கிரக தோத்திரம்

### சூரியன்

காசினி இருளை நீக்கும் கதிரொளி யாகி எங்கும்
பூசுர உலகோர் போற்றப் பொசிப்புடன் சுகத்தை நல்கும்
வாசியே ழுடைய தேர்மேல்ப மகாகிரி வலமாய் வந்த
தேசிகா எனைரட் சிப்பாய் செங்கதி ரவனே போற்றி

### சந்திரன்

அலைகடல் அமுதந் தன்னோ டன்றுவந் துதித்த மிக்க
கலைவளர் திங்க ளாகிக் கடவுளோர்க் கமுதம் ஈயும்
சிலைநுதல் உமையாள் பாகன் செஞ்சடைப் பிறையாய்மேரு
மலைவல மாக வந்த மதியமே போற்றி போற்றி

### அங்காரகன்

வசனம்நல் தைரி யந்தான் மன்னவர் சபையில் வார்த்தை
புசபல பராக்ர மங்கள் போர்தனில் வெற்றி ஆண்மை
நிசமுடன் அவர வர்க்கு நீள்நிலம் தன்னில் நல்கும்
குசன்நில மகனாம் செவ்வாய் குரைகழல் போற்றி போற்றி

### புதன்

மதனநூல் முதலா உள்ள மறைகளும் கல்வி ஞானம்
விதமுடன் அவர வர்க்கு வஞ்சைகள் அருள்வோன் திங்கள்
சுதன்பவிசு பாக்கியங்கள் சுகம்பல கொடுக்க வல்லான்
புதன் கவிப் புலவன் சீர்சால் பூங்குழல் போற்றி போற்றி

### குரு (பிரகஸ்பதி)

மறைமிகு கலைநூல் வல்லோன் வானவர்க் கரசன் மந்த்ரி
நறைசொரி கற்ப கப்பொன் நாட்டினுக் கதிப னாக்கி
நிறைதனம் சிவிகை மன்றல் நீடுபோ கத்தை நல்கும்
இறையவன் குருவி யாழன் இணையடி போற்றி போற்றி

### சுக்கிரன்

மூர்க்கவான் சூரன் வாணன் முதலினோர் குருவாய் வையம்
காக்கவான் மழைபெய் விக்கும் கவி மகன் கனகம் ஈவோன்
தீர்க்கவா னவர்கள் போற்றச் செத்தவர் தமை எழுப்பும்
பார்க்கவன் சுக்கராச் சாரி பாதபங் கயமே போற்றி

### சனிபகவான்

முனிவர்கள் தேவர் ஏனை மூர்த்திகள் முதலா னோர்கள்
மனிதர்கள் சகல வாழ்வுன் மகிமைஅல் லால்வே றுண்டோ
கனிவுல தெய்வம் நீயே கதிர்சேயே காகம் ஏறும்
சனிபக வானே போற்றி தமியனேற் கருள்செய் வாயே

### ராகு

வாகுசேர் நெடுமால் முன்னம் வானவர்க் கமுதம் ஈய
ஏகிநீ நடுவி ருக்க எழில்சிரம் அற்றுப் பின்னர்
நாகத்தின் உடலோ டுன்றன் நற்சிரம் வாய்க்கப் பெற்ற
ராகுவே போற்றி போற்றி ரட்சிப்பாய் ரட்சிப் பாயே

### கேது

மாதுரு நெடுமால் முன்னம் வானவர்க் கமுதம் ஈயும்
போதுநீ நடுவிருக்கப் புகழ்சிரம அற்றுப் பின்னர்
ஓதுறும் அரச நாகத் துயர்சிரம் ஐந்து பெற்ற
கேதுவே போற்றி போற்றி கீர்த்தியாய் ரட்சிப் பாயே

---

## பஞ்ச ஆரண்ய ஸ்தலங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | திருக்கருகாவூர் | — | உஷக்காலம் |
| 2 | அவளிவநல்லூர் | — | காலசந்தி |
| 3 | ஹரித்வாரமங்கலம் | — | உச்சிக்காலம் |
| 4 | ஆலங்குடி | — | சாயரட்சை |
| 5 | திருக்கொளம்புதூர் | — | அர்த்தசாமம |